**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.202** **நாள் : 05.08.2025**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீர்நிலைகளை தூர்வாரி மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளுதல் மழைநீர் வடிகால் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், குளங்கள் புனரமைத்தல், புதிய குளங்கள் உருவாக்குதல், உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127, சின்மயா நகர் பாலப் பகுதியில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (05.08.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விருகம்பாக்கம் கால்வாய் 6.37 கிலோ மீட்டர், நீளமும் 8 மீட்டர் முதல் 20 மீட்டர் அகலம் மற்றும் ஆழம் 2.25 மீட்டர் உள்ளது. இந்த கால்வாய் மண்டலம் 11 வார்டு 148ல் புவனேஸ்வரி நகரில் ஆரம்பித்து மண்டலம் 10 மற்றும் 8 வழியாக மண்டலம் 9ல் நெல்சன் மாணிக்கம் சாலை வழியாக கூவம் ஆற்றை சென்று அடைகிறது. வரும் மழைக் காலத்தை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விருகம்பாக்கம் கால்வாயில் 5 இடங்களில் தூர்வாரும் பணி நேற்று தொடங்கி இந்த மாதம் இறுதிக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விருகம்பாக்கம் கால் வாயில் தடுப்புச் சுவர் இல்லாத இடங்களில் தடுப்புச் சுவர் கட்டி கால்வாயை புனரைமைக்க ரூபாய் 30கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பம் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது** :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு வருடமும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகளுக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் தலைமைச் செயலகத்தில் இன்று (05.08.2025) விரிவான ஆய்வினை மேற்கொண்டு, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு நீர்வளத்துறையின் பராமரிப்பில் இருந்த விருகம்பாக்கம் கால்வாய், வீராங்கல் ஓடை மற்றும் ஓட்டேரி நல்லா கால்வாயினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வகைபாடு மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்த ஆண்டு விருகம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இதில் மேம்பாட்டுப் பணிகள்

மேற்கொள்வதற்கான பணி ஆணை விரைவில் வழங்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 5 இயந்திரங்கள் மூலம் கால்வாயில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரை மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. அகற்றப்படும் கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதேபோல் ஓட்டேரி நல்லா கால்வாயில் மாநகராட்சியின் சார்பில் சுற்றுசுவர் கட்டும் பணி உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் மண்டலம் 1, 2, 3, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய 10 மண்டலங்களில் தனியார் நிறுவனத்தின் வாயிலாக தூய்மைப்பணிகள் மேற்கொளவதற்கு வழிவகை செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, இராயபுரம் மற்றும் திரு. வி. க. நகர் ஆகிய 2 மண்டலங்களில் தனியார் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை நடைபெற்று வருகிறது. தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய பணியும், அவர்களுக்கான பணிப் பாதுகாப்பும் வழங்கப்படும். தனியார் நிறுவனத்தின் வாயிலாக தற்போது பணிப்புரிந்து வரும் தூய்மைப்பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களை எப்பொழுதும் ஆதரித்து வருகிறார்கள். தூய்மைப் பணியாளர் நலவாரியம் அமைத்து அவர்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். தூய்மைப்பணியாளரிடம் மண்டலம் 5 மற்றும் 6ல் பணிசெய்வதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டு அவர்களும் பணியில சேர்ந்து வருகிறார்கள். மண்டலம் 5 மற்றும் 6ல் குப்பைகள் தேக்கமின்றி அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. இந்த மண்டலங்களில் வார்டு வாரியாக பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் வழங்கப்பட்டு அதன்மூலம் வீடு வீடாகச் திடக்கழிவுகள் சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த ஆய்வின்போது, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திரு.பொ.லோகு, திருமதி ஆர். ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்தனா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**